

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 27.06.2026

# என்ன கண்டுபிடித்துள்ளார் நிர்மல்குமார்?

“ஆட்சிக்கு வந்த முப்பதே நாளில் தனது பெரம்பூர் தொகுதியை முதலிடத்துக்குக் கொண்டு வந்துவிட்டார் முதலமைச்சர். மின்வெட்டில்தான் முதலிடத்தில் இருக்கிறது பெரம்பூர்” என்று சட்டமன்றத்திலேயே நெத்தியில் உறைக்கும் அளவுக்குக் கொட்டினார் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அவர்கள். தனது பதிலுரையில் அதற்கும் பதில் சொல்ல வில்லை முதலமைச்சர் விஜய்.

மின்துறைக்கு அமைச்சராக ஆக்கப்பட்டவர் மகா புத்திசாலி. அவருக்கு ‘நான் முதல்வன்’ என்ற வார்த்தையே புரியவில்லையாம். இரண்டாண்டு காலத்துக்குள் மூன்று கட்சி மாறியவருக்கு ‘நான் முதல்வன்’ என்ற வார்த்தையே புரியவில்லையாம். அப்படிப்பட்டவருக்குதான் மின்துறை தரப்பட்டுள்ளது. அவர் மின்வெட்டுக்கு வாய்க்கு வந்ததை எல்லாம் அடித்துவிட்டார்.

★ மின்வெட்டே இல்லை.
★ எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் வேண்டுமென்றே மின்சாரத்தைத் துண்டிக்கிறார்கள்.
★ மின்வாரிய அலுவலகத்தில் ‘ஹார்ட் டிஸ்க்’ திருடு போய்விட்டது.
★ பியூஸ் கேரியரை யாரோ எடுத்துச் சென்றுவிட்டார்கள்.
★ மின்சாரம் கொடுக்க முடியாதற்குக் காரணம் தி.மு.க. அரசாங்கம். இதோ வெள்ளை அறிக்கை வெளியிடப் போகிறேன்… இதுதான் நிர்மல் குமாரின் பதில்கள் ஆகும். ‘கரண்ட் எப்ப வரும்?’ என்ற கேள்விக்கு இது எதுவும் பதில் இல்லை.

**கட்சித் தாவல் நிர்மல்குமார், ‘வெள்ளை அறிக்கை’ பூச்சாண்டியைக் காட்டிக் கொண்டே இருந்தார். இப்போது வெள்ளை அறிக்கையையும் வெளியிட்டு விட்டார். அது வெறும் நொள்ளை அறிக்கைதான். வெள்ளை அறிக்கை வெளியிட்டு, பேப்பரைத்தான் வீணடித்துள்ளார். இதனால் மின்துறைக்கு கூடுதல் செலவுதான் ஏற்படுத்தி இருக்கிறார் நிர்மல் குமார்.**

மின் தேவை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. அப்படி அதிகரிக்கும் போது அதற்கான கொள்முதலை அதிகரிக்க வேண்டும், உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கான செலவினம் என்பதும் அதிகரித்துள்ளது. ஒரு குழந்தை உள்ள வீடு, நான்கு குழந்தை உள்ள வீடாக மாறும் போது செலவினம் அதிகரிக்கும் அல்லவா? அதனைக் கணக்கிட வேண்டாமா?

**தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் மின் கட்டணம் உயர்த்தப்படவே இல்லை. இதை முதலில் கவனத்தில் கொள்ள வேண்டாமா? 2 லட்சம் உழவர்களுக்கு இலவச மின் இணைப்பு கொடுத்தது தி.மு.க. அரசு.**

**நிர்மல் குமார் வெளியிட்ட புள்ளிவிவரப்படியே மின்சார வாரியத்தின் வருவாய் பற்றாக்குறை தி.மு.க. ஆட்சியில் குறைந்துள்ளதை ஒப்புக்கொண்டுள்ளார்கள். வருவாய் பற்றாக்குறையானது 2011-16 இல் 56,361 கோடி, 2016-21 இல் 58,534 கோடி ரூபாய். தி.மு.க. ஆட்சியில் வருவாய் பற்றாக்குறை ரூ.34,447 கோடியாகக் குறைக்கப்பட்டது. இது சாதனை அல்லவா?**

கடந்த ஆட்சியில் கட்டமைப்புக்காகச் செலவு செய்யப்பட்டதை நிர்மல்குமார் வெளியிட்ட அறிக்கையே ஒப்புக் கொள்கிறது. 99,573 மின்மாற்றிகள் புதியதாக நிறுவப்பட்டுள்ளன. 423 துணை மின் நிலையங்கள் அறிவிக்கப்பட்டு பல துணை மின் நிலையங்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. வடசென்னை அனல் மின் திட்டம் நிலை 3, உடன்குடி மின் திட்டம், எண்ணூர் அனல் மின் நிலையப் பணிகள், குண்டாறு மின் திட்டப் பணிகள், கொல்லிமலை மின் திட்டம் ஆகியவை தொடங்கி, பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. இதையும் தனது ஆட்சியின் சாதனையாகத்தான் சொல்லி திறந்து வைக்கப் போகிறீர்கள். இதுபோன்ற வளர்ச்சிப் பணிகள் எதையும் கணக்கில் எடுக்காமல், செலவினம் என்று சொல்வதே, நிர்வாகம் என்றால் என்னவென்று தெரியாதவர் சொல்வது ஆகும்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின்துறை அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி, இவை அனைத்துக்கும் ஆணித்தரமான மறுப்பை பதிவு செய்து விட்டார்.

★ **கடந்த ஐந்தாண்டுகள் திராவிட மாடல் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் நலிவடைந்து கிடந்த மின்சார வாரியம் காப்பாற்றப்பட்டது.**
★ **மின் தேவையானது ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்தே வந்துள்ளது. அப்படி மின் தேவை அதிகரித்த போதும் மக்கள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.**
★ **அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 13.5% வட்டிக்கு பல்வேறு வங்கிகளில் கடன் வாங்கப்பட்டிருந்தது. அதை எல்லாம் சீர்படுத்தி 9.5% வட்டி என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டது. இதன் மூலம் ஆண்டுக்கு 1200-1500 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டது.**
★ **பிளை ஆஸ் (fly ash) விற்பனை ஆண்டுக்கு 90 கோடி ரூபாய் என்று இருந்ததை ஆண்டுக்கு 160 கோடி ரூபாய் என்ற அளவிற்கு வருவாய் உயர்த்தப்பட்டது.**
★ **2021 இல் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது மின்சார வாரியத்தின் கடன் 1,59,731 கோடி இருந்தது. ஆண்டுக்கு 15,000 கோடி வட்டி மட்டுமே கட்டி வந்தோம். ஐந்தாண்டுகளில் முந்தைய ஆட்சியில் வாங்கிய கடனுக்கான வட்டி மட்டுமே 75,000 கோடி கட்டி உள்ளோம். இதைக் கூறாமல் மறைத்துள்ளனர்.**
★ **டெண்டர்களைப் பொறுத்தவரையில் அனைத்து டெண்டர்களும் ஆன்லைன் முறையில் வெளிப்படையாக நடந்துள்ளது. நாம் நிர்ணயித்துள்ள தர அளவுகளைக் குறைக்காமல், நிபந்தனைகளை மாற்றாமல் புதிய அரசு எவ்வளவு ரூபாய்க்கு கொள்முதல் செய்வார்கள் என்பதையும் பார்ப்போம்.**
★ **சமீபத்தில் த.வெ.க. அரசு வெளியிட்ட 300 ஊழியர்களுக்கான பதவி உயர்வு என்பது தி.மு.க. ஆட்சியில் இறுதி செய்யப்பட்டது. சமீபத்தில் வழங்கிய பணி ஆணைகள் தி.மு.க. ஆட்சியில் அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம் மூலம் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இது எதுவும் த.வெ.க. அரசின் சாதனைகள் அல்ல.**
★ **மின்வெட்டுப் பிரச்சினையால் மக்கள் அவதியுற்று வருகின்றனர். அதைத் தீர்க்க ஆய்வுக் கூட்டமே நடத்தவில்லை.**

– இவை அனைத்தும் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் மறுப்புகள் ஆகும். இதற்கும் இந்நாள் அமைச்சர் நிர்மல் குமாரிடம் இருந்து பதில் வராது. வெள்ளை அறிக்கை மூலமாக மீண்டும் மீண்டும் சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டுள்ளார் நிர்மல் குமார்.

தெரியாத்தனமாக மக்கள் கூடுதல் வாக்குகளை த.வெ.க.வுக்குக் கொடுத்துவிட்டார்கள். அதை மனதில் வைத்து ஆட்சியில் இருக்கும் காலத்துக்குள் மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய முடியுமா என்று பாருங்கள். தி.மு.க. ஆட்சி மீது குற்றம் சொல்லி காலத்தைக் கடத்த நினைக்காதீர்கள்.





கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.6.2026) அவரது இல்லத்தில், தே.மு.தி.க. பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ., தே.மு.தி.க. பொருளாளர் எல்.கே. சுதீஷ் எம்.பி. ஆகியோர் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினர்.

## சட்டப்பேரவையில் முதல்வரின் தவறான தகவலை சுட்டிக் காட்டியதற்கு ரெய்டா?

# த.வெ.க. அரசின் பழிவாங்கும் மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம்! சட்டப்படி வழக்கைச் சந்திப்பேன்!

## சோதனை குறித்து – முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

**சென்னை, ஜூன் 27-**

**சட்டப் பேரவையில் முதல்வரின் தவறான தகவலை சுட்டிக் காட்டியதற்கு ரெய்டா? என்றும், த.வெ.க. அரசின் பழிவாங்கும் மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம்! சட்டபடி வழக்கை சந்திப்பேன்! எனவும், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேட்டியளித்தார்.**

தி.மு.க. முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு வீடு உள்ளிட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை (DVAC) அதிகாரிகள் சோதனை நடத்தினர். கரூரில் உள்ள நெடுஞ்சாலைத் திட்டங்களில் முறைகேடு எனக்கூறி நேற்று முன்தினம் இந்த சோதனை மேற்கொண்டனர்.

இச்சோதனை குறித்து முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு எம்.எல்.ஏ. செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் இரவு அளித்த பேட்டி வருமாறு:-

த.வெ.க. அரசின் எண்ணம் என்றால் பழி வாங்கக்கூடிய ஒரு நோக்கமாக தான் இதை நான் பார்க்கிறேன். புதிதாக அமைக்கப்பட்ட தமிழக அரசு சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும் என பல்வேறு குற்றச்சாட்டுகளை அடுக்கி பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும் என வாய்ப்பு வழங்க கூறினேன்.

மேலும் தமிழ்நாடு அரசு சார்பில் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் அளிக்க வேண்டுமென கூறி அதுதான் அரசியல் மரபு என நாங்கள் பேசினோம்.

அன்றைக்கு நான் சட்டப்பேரவையில் கொறடா என்கின்ற நோக்கில் கேட்ட கேள்வியை மனதில் வைத்துக்கொண்டு, இந்த அரசு பழிவாங்கக் கூடிய ஒரு நோக்கமாக இந்த சோதனையை மேற்கொண்டுள்ளது.



### திருவண்ணாமலை கல்லூரியில் சோதனை – மாணவர்கள் பாதிப்பு!

சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டினை மையப்படுத்தி தான் எனக்கு சொந்தமான மற்றும் எனக்கு தொடர்புடைய இடங்களில் சோதனை மேற்கொண்டனர். எனக்கு இரண்டு இடங்கள் மட்டுமே சொந்தமாக உள்ளது. மாறாக திருவண்ணாமலை மாவட்டத்தில் இயங்கி வரக்கூடிய ஒரு கல்லூரியில் சோதனை மேற்கொள்வதாக கூறி காலை முதல் மாலை வரை மாணவர்களை படிக்க விடாமல் செய்து மாணவர்களின் மனநிலையை புண்படுத்தக்கூடிய ஒரு நோக்கில் இந்த சோதனை மேற்கொண்டுள்ளார்கள்.

### சோதனைகளுக்கு எல்லாம் நாங்கள் பயப்படமாட்டோம்!

இது போன்ற செயல்களில் தமிழக வெற்றிக்கழக அரசு ஈடுபட்டால் நாங்கள் பயந்து விடுவோம் என்று எண்ணுகிறது. நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர்கள் இது போன்ற அச்சுறுத்தல்களுக்கு ஒரு பொழுதும் பயப்பட மாட்டோம்.

### நீதிமன்றத்தில் நிரபராதி என நிரூபிப்பேன்!

இந்த சோதனை தொடர்பாக நீதிமன்றத்தை தற்போது நாடி உள்ளோம் கண்டிப்பாக நீதிமன்றத்தில் நான் நிரபராதி என நிரூபித்து காட்டுவேன்.

நான் எந்த தவறும் செய்யாத ஒருவன், பரிசுத்த மானவன் என்பதை நீதிமன்றம் வாயிலாக நினைப்பேன்.

எனது தலைவர் மீசாவில் ஓராண்டு காலம் சிறையில் இருந்துள்ளார். எங்களது அரசு மிகச் சிறப்பாக மக்களின் நான் கருதி நடத்தி காட்டியுள்ளோம்.

### ரூ. 40 இலட்சம் பறிமுதல் என்பது பொய்!

என்னிடம் இருந்து 40 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது என்பதை முழுக்க முழுக்கமான ஒரு பொய்.

குறிப்பாக எனது சென்னை அலுவலகத்திலும், எனது சொந்த ஊர் கிராமத்திலும் இந்த பணம் பறிமுதல் செய்யப்படவில்லை.

குறிப்பாக பொதுப்பணித்துறை அமைச்சராக நான் இருந்த பொழுது நான் ஆய்வுக்காக மேற்கொள்ளக்கூடிய சுற்றுப் பயணங்கள் மற்றும் ஆய்வு மேற்கொண்ட புகைப்படங்கள் அனைத்தும் கணினி வழியாக தான் பகிர்வேன். அதன் காரணமாக அந்த கணினியை பறிமுதல் செய்ய வேண்டும் என கேட்டு கொண்டனர். நானும் அதற்கு மறுப்பு தெரிவிக்காமல் தாராளமாக எடுத்துக் கொண்டு செல்லுங்கள் என தெரிவித்து வழங்கி விட்டேன். எனது கழக செயல்பாடுகள் தொடர்பாகவும் எனது செயல்பாடுகள் தொடர்பான விவரங்கள் மட்டுமே அதில் இருக்கும் அதன் காரணமாகவே அதனை வழங்கி விட்டேன். அதை அவர்கள் பார்த்துவிட்டு திருப்பி தருவதாக தெரிவித்துள்ளார்கள்.

### டெண்டர் விவகாரம் எல்லாம் இல்லத்தில் இருக்காது!

கரூர் மாவட்டம் விவகாரம் பொறுத்தவரையில் ஒரு அலுவலகத்தில் தோட்டக்கலை நிறுவனத்தில் ஒரு டெண்டர் போட வேண்டும் என்றால் அதன் ஆவணங்கள் சம்பந்தப்பட்ட இடத்தில் மட்டுமே இருக்கும் ஒரு அமைச்சரின் இல்லத்தில் இருக்காது. நெடுஞ்சாலைத்துறையில் டெண்டர் விடுவதற்கான அதிகாரம் இரண்டு அதிகாரிகளுக்கு மட்டுமே உள்ளது. எனவே அதற்கான ஒப்புதல் ஆவணம் அதிகாரியிடம் மட்டுமே இருக்குமே தவிர எனது இல்லத்தில் இருப்பதற்கான வாய்ப்பு இல்லை.

### சோதனை என்பது அதிகாரத்தின் உச்சம்!

இந்த லஞ்ச ஒழிப்பு சோதனை என்பது அதிகாரத்தின் உச்சமாகவே நான் பார்க்கிறேன். ஜனநாயகத்தின்படி எதிர்க்கட்சியாக எங்களுக்கு கேள்வி கேட்க உரிமை உண்டு. அதன் அடிப்படையில் தான் நான் சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி சார்பில் கேள்விகளை கேட்டேன். எங்களைப் போன்று மொழிப் போருக்காக சிறை சென்றும், மக்களுக்காக பணிகளையும் முதல்வர் ஈடுபட்டாரா?

நாங்கள் மக்களுக்காக பாடுபட்டவர்கள், இந்த சோதனை முழுக்க முழுக்க அதிகாரத்தின் உச்சம்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

## விவசாயப் பணியை இழிவுபடுத்தும் அமைச்சர்

# தென்னை - பனை மரம் ஏறி - வயலில் வேலை செய்வாரா?

## மதுரை விவசாயிகள் பகிரங்க சவால்!

*மதுரை, ஜூன் 27 -*

விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் திருவள்ளூரில் நடைபெற்ற விவசாயிகள் நலன் காக்கும் கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்றனர்.

அப்போது த.வெ.க. அரசு கொடுத்த வாக்குறுதிப்படி விவசாய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கருப்பு பேட்ஜ் அணிந்து மாவட்ட ஆட்சியர் முன் தரையில் அமர்ந்து போராட்டம் செய்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய விவசாயிகள் த.வெ.க. ஆட்சிக்கு வருவதற்கு முன் என்ன வாக்குறுதி கொடுத்ததோ அதை தானே செய்ய கோரி நாங்கள் போராட்டம் நடத்தி வருகிறோம்.

இதில் எதிர்கட்சியினரின் தூண்டுதல் எங்கே வந்தது? என்று சராமாரியாக கேள்வி எழுப்பி விவசாயிகளுக்கு அரணாக இருப்பேன் என்று கூறிய தற்போதைய முதல்வர் சொன்ன கருத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்டு எங்களின் வலி, வேதனை தெரியாமல் நாங்கள் நடத்தும் போரட்டத்தை கொச்சைப்படுத்துகிறார் என்று வேதனை தெரிவித்தனர்.

இதனிடையே மதுரையில் மதுரை மாவட்ட விவசாயிகளின் மாதாந்திர குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்தது. அப்போது தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி தமிழ்நாடு அரசு விவசாய பயிர்கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என எழுதப்பட்ட பதாகைகளுடன் விவசாயிகள் பங்கேற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய விவசாயிகள், விவசாயத்தை காட்டிலும் விளையாட்டு துறை கடினம் என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா முன்பு ஒரு நிகழ்வில் கூறியதை குறிப்பிட்டு கடும் கண்டனம் தெரிவித்தனர்.

தொடர்ந்து பேசிய விவசாயிகள் நாங்கள் அமைச்சருக்கு சவால் விடுகிறோம், களத்திற்கு வந்து விவசாயத்தில் ஈடுபட சொல்லுங்கள். தென்னை, பனை மரங்களில் அவரை ஏற சொல்லுங்கள், பல இடங்களில் தற்போது மாடுகளை கொண்டு ரேஸ் நடக்கிறது. அதில் பங்கேற்று மாடுகளை கொண்டு ஏறி, இறங்கி நீண்ட தூரம் ரேஸ் செய்ய சொல்லுங்கள், கோயில் மாட்டை அடக்க சொல்லுங்கள். இல்லை என்றால் ஒரு முழு நாள் வயலில் இறங்கி விவசாய பணிகளை செய்ய சொல்லுங்கள். இப்படி களத்தில் இறங்கி எதையாவது செய்து விட்டு எது கடினம் என்று பேச சொல்லுங்கள் என்று அமைச்சர் ஆதவிற்கு விவசாயிகள் சவால் விடுத்தனர்.

# கீழடி அருங்காட்சியகத்தை பார்வையிட்ட டெல்லி மாணவர்கள்!

## பழந்தமிழரின் தொல்பொருட்களை வியப்புடன் பார்வையிட்டு மகிழ்ந்தனர்!

கீழடி, ஜூன் 27 –

கீழடி தொல்பொருள் அருங்காட்சியகத்தையும், திறந்தவெளி அருங்காட்சியகத்தையும் டெல்லியைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் வியப்புடன் பார்வையிட்டனர்.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் கண்டெடுக்கப்பட்ட 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொல்பொருட்களை அனைவரும் பார்வையிடும் வகையில், கடந்த ஆட்சியில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு அருங்காட்சியகம் அமைத்தது. மேலும், பழந்தமிழரின் பெருமையைப் பறைசாற்றும் வகையில், கீழடியில் அகழாய்வு நடைபெற்ற இடங்களை, திறந்தவெளி அருங்காட்சியமாக திராவிட மாடல் அரசு மாற்றியது. இவ்விரண்டு அருங்காட்சியகங்களையும் நாள்தோறும் ஏராளமானோர் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், டெல்லியைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் 50க்கும் மேற்பட்டோர், கீழடி அருங்காட்சி யகத்தை ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

பழந்தமிழர்கள் பயன்படுத்திய தொல்பொருட்களை வியப்புடன் பார்வையிட்ட மாணவர்கள், திறந்தவெளி அருங்காட்சியகத்தில் உறைகிணறு, செங்கல் கட்டுமானம், சுடுமண் பானைகள் உள்ளிட்டவற்றையும் பார்வையிட்டு மகிழ்ச்சியடைந்தனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் சுந்தரபாண்டிபுரம் மிஸ்பா மழலையர் பள்ளியில் ஒன்று முதல் ஐந்து வரை படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு நோட் புத்தகம் வழங்கும் நிகழ்வு பள்ளி நிர்வாகி சிமியோன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் பங்கேற்று வழங்கினார். நிகழ்வில் மாவட்ட பிரதிநிதிகள் ஸ்டீபன் சத்யராஜ், அன்பழகன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஹரி கிருஷ்ணன், அசோக் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் அல்லி டெய்சிபாய், சுப்புலட்சுமி, மதுபாலா, இசக்கியம்மாள், அன்னாள் சாந்தி உள்பட ஆசிரியப் பெருமக்களும் கலந்து கொண்டனர்.